தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 7-6-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சி-டாக் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் விவசாயிகளை முன்னிலைப்படுத்தி அவர்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு பணிகளை செய்து வருகிறது. பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள், விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் எச். பிலிப் அவர்கள் மற்றும் சி-டாக் நிறுவனத்தின் இயக்குநர் திரு.எ.மகேஷ் ஆகியோரின் முன்னிலையில் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் சி.ஆர். அனந்த குமார் அவர்கள் இன்று (7-6-2016) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி சி-டாக், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் பின்வரும் இரண்டு திட்டங்களை செயல்முறை படுத்துவதற்கு ஒத்துழைக்கும்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழ்நாடு வேளாண் இணையதளம் மற்றும் பயிர் மருத்துவர் ஆகியவற்றை வலை தளத்திற்கு ஏற்றவாறு பல்வேறு ஊடகத்தளங்கள் மற்றும் இயக்க முறைமைகளுக்கு மாற்றப்படும். இதுவரை வேளாண் இணையதளம் மற்றும் பயிர் மருத்துவர் ஆகியவை டெஸ்க்டாப் பயன்பாடுகளாகத்தான் இருந்தது. எனவே இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் மொபைல் அடிப்படையிலான பயன்பாடுகளுக்கு மாற்றம் செய்யப்படுவதற்கு வழிவகுக்கிறது. தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் வேளாண் விரிவாக்க பணியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் ஆண்டிராய்டு மொபைல் அடிப்படையிலான e-வேளாண் விரிவாக்க அமைப்பு உருவாக்கும் முயற்சி நடைபெற உள்ளது. மேலும், இந்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக e-விரிவாக்க மையத்தில் பல்வேறு தகவல் தொழில்நுட்ப திட்டங்களை செயல்படுத்துவதற்கு தொழில்நுட்ப ஆதரவு வழங்கப்படும்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்